Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை.

மலர் I.] 1941-ம் ஞு ஜூன்மீ 20௨, வெள்ளிக்கிழமை. [இதழ் 14

## வாரச் செய்திக் குறிப்புகள்.

### 1. ஜெர்மனியிலும், பிரிட்டனிலும், இதர இடங்களிலும் ஆகாய விமானப் போர்.

ஜெர்மனியிலுள்ள தொழிற்சாலை பிரதேசமாகிய ரூர் மாகாணத்தில், இதுவரைக்கும் தாக்காத மாதிரி, அவ்வளவு கடுமையாக பிரிட்டிஷ் விமானப் படை தாக்கியிருக்கிறதென்று சென்றவாரச் செய்திகளிலிருந்து தெரியவருகிறது. அநேக விமானங்களடங்கிய பிரிட்டிஷ் வெடிகுண்டு விமானப்படை ரூர் பிரதேசத்தில் பல தொழிற்சாலை லட்சியங்களின் மேல் வெடிகுண்டுகளைப் போட்டது. அதனால் பல இடங்களில் பெரு நெருப்புகள் உண்டாயின. ஒரே இரவில் செய்த பலமான தாக்குதல்களில் அதிக பலமானது இது தான் என்று பிரிட்டிஷ் விமான மந்திரி சபை அறிக்கை கூறுகிறது. அதிகமான எடையுள்ள வெடிகுண்டுகள் ஏராளமாகப் போடப்பட்டன; அநேக தொழிற்சாலைக் கட்டடங்கள் நாசமாக்கப்பட்டன. இந்த விமானத் தாக்குதலிலிருந்து 6 விமானங்கள் திரும்பிவரவில்லை.

மேற்கு ஜெர்மனியில், கலோன் பிரதேசத்தில் உள்ள தொழிற்சாலை லட்சியங்களின்மேலும் பிரிட்டிஷ் விமானங்கள் வெடி குண்டுகளைப் போட்டன; பல இடங்களில் நெருப்புப் பிடித்துக்கொண்டது. மேகங்கள் மறைத்துக்கொண்டதால், தாக்குதலால் உண்டான சேதத்தை அறிவதற்கு முடியவில்லை. இதில் ஒரு பிரிட்டிஷ் விமானம் கூட சேதமடையவில்லை. ஷ்வார்ட் என்ற தொழிற்சாலைப் பிரதேசமும் தாக்கப்பட்டது. பிரிட்டிஷ் விமானங்கள் மேற்கு ஜெர்மனியின் மேல் பறந்து வெடிகுண்டுகளைப் போட்டன என்பதை ஜெர்மன் சமாச்சார ஸ்தாபனம் ஒத்துக்கொள்ளுகிறது.

சென்றவாரம், பிரிட்டிஷ் கரையோர விமானப் படை, ஜெர்மனியின் ஆதிக்கத்திலுள்ள கடற்கரைப் பட்டணங்களைத் தாக்கியது. பிரெஸ்ட் என்ற பிரெஞ்சுக் கடற்கரைப் பட்டணம் பலமாகத் தாக்கப்பட்டது. அங்குள்ள கப்பல் கட்டும் சாலைகளுக்குச் சேதம் ஏற்பட்டது. ஜெர்மானியர்களுடைய மூன்று பெரிய யுத்தக் கப்பல்கள், "ஷார்ன் ஹார்ஸ்ட்", "நீஸே", "பிரின்ஸ் யூஜன்" அவ்விடத்தில் தங்கியிருந்தன. போட்ட வெடி குண்டுகள் கப்பல் கட்டும் சாலைகளின்மேலும், ஜெர்மன் யுத்தக் கப்பல்கள்மேலும் விழுந்தன.

பிரெஞ்சு மாகாணமாகிய பிரிட்டனியில் உள்ள ஆகாய விமானச்சாலைகள், பிரிட்டிஷ் விமானங்களால் தாக்கப்பட்டன. வடக்கு பிரான்சில், செயிண்ட் ஓமார் என்ற இடத்திலுள்ள விமானங்கள் இறங்கும் இரண்டு மைதானங்களின் மேல் வெடிகுண்டுகள் போடப்பட்டு, அவைகள் நாசமாக்கப்பட்டன. விமானச்சாலை கட்டடங்கள்மேல் வெடிகுண்டுகள் விழுந்தன. விமானப் போரில் மூன்று ஜெர்மன் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

பிரான்சிலுள்ள துறைமுகங்கள் மேல், பிரிட்டிஷ் விமானங்கள் வெடிகுண்டுகளை வீசின. பலோன் என்ற பிரெஞ்சு ஜில்லா தாக்கப்பட்டது. பலோனில் வெடிகுண்டுகள் வெடிப்பது கேட்டதும், ஜெர்மன் சோதனை விளக்குகள் ('சர்ச் லைட்') ஆகாயத்தை ஆராய்ந்து பார்த்தன. உடனே பிரிட்டிஷ் விமானங்கள் கலே என்ற பிரெஞ்சு துறைமுகத்துக்குப் போய் அங்கு வெடிகுண்டுகளைப் போட்டன; பிறகு மறுபடியும் பலோன் பிரதேசத்துக்கு வந்து, வெடிகுண்டுகளால் தாக்கின.

பிரான்சிலுள்ள சேர்போர்க்கின் விமானச்சாலையும், இங்கிலீஷ் கால்வாயில் சோதனை வேலை செய்துகொண்டிருந்த ஒரு ஜெர்மன் கப்பலையும், பிரிட்டிஷ் விமானங்கள் தாக்கின. பீரங்கிகளும், யந்திர துப்பாக்கிகளும், அவைகளின்மேல் உபயோகப்படுத்தப்பட்டன. இந்தத் தாக்குதல் பகலில் நடந்தது. இதில் ஒரு பிரிட்டிஷ் வெடிகுண்டு விமானம் இழக்கப்பட்டது.

ஹாலந்து கரையோரத்தில், ஒரு டச்சு 'கான்வாய்' துணைக்கப்பல் பிரிட்டிஷ் ஆகாய விமானங்களால் தாக்கப்பட்டது. அந்த விமானங்கள் கடலுக்குள் சென்று வெடிக்கும் 'டார்பிடோ' வெடிகுண்டுகளைத் தாங்கிச் சென்றன. 6,000 டன் எடையுள்ள ஒரு 'சப்ளை' கப்பல் 'டார்பிடோ' பட்டு மூழ்கிற்று. இதில் ஒரு பிரிட்டிஷ் விமானம் காணமற் போய்விட்டது.

சென்ற வாரம், பிரிட்டனின் சில இடங்களில் ஜெர்மன் விமானங்கள் வெடிகுண்டுகளைப் போட்டன. கிழக்கு இங்கிலாந்தில், சில ஜெர்மன் விமானங்கள் வெடி குண்டுகளைப்போட்டன. ஒரு ஜெர்மன் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது. கிழக்கு ஆங்கிலியாவிலுள்ள ஒரு பட்டணத்தில் வெடி குண்டுகளினால் சிலர் உயிரிழந்தார்கள். தென்கிழக்குக் கரையோரத்தில், பிரிட்டிஷ் விமானங்கள் இரண்டு ஜெர்மன் விமானங்களைக் கடலில் சுட்டு வீழ்த்தின.

சென்ற வெள்ளிக்கிழமை இரவு, பிரிட்டனின் தெற்கு, தென்கிழக்கு, கிழக்கு, பிரதேசங்களில் ஜெர்மன் விமானங்கள் வெடி குண்டுகளைப் போட்டன. ஆனால் எங்கும் பலமாகத்தாக்கவில்லை. அதிகமான கட்டடச்சேதமும், உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை. இந்த விமானங்களில், ஏழு சுட்டு வீழ்த்தப்பட்டன. இதில் ஒரு விமானம் கீழே விழுந்ததும் நெருப்புப்பற்றிக்கொண்டு எரிந்தது. எரிந்த இடத்தை ஒரு லட்சியமாக வைத்துக் கொண்டு, இதர ஜெர்மன் விமானங்கள் ஒருமணிக்கு மேலாக வெடிகுண்டுகளைப் போட்டுக்கொண்டே இருந்தன. இந்த விமானத்திலிருந்த நான்கு ஜெர்மன் விமானிகளும், விமான விரிப்புக்குடையைக் கொண்டு கீழே குதித்து விட்டார்கள். மூன்றுபேர் பிரிட்டிஷ் உள்நாட்டுப் பாதுகாப்புப்படையினரால் பிடிக்கப்பட்டார்கள்; மற்றொருவர் போலீசாரிடம் சரணமடைந்தார். சென்ற சனிக்கிழமை காலை, ஒரு ஜெர்மன் விமானம் இங்கிலீஷ் கால்வாயில் சுட்டு வீழ்த்தப்பட்டது. ஞாயிற்றுகிழமையன்று மேற்கு இங்கிலாந்தில் சில இடங்களில் வெடி குண்டுகள் போடப்பட்டன. தெற்கு இங்கிலாந்தில், இரண்டு இடங்களில் வெடி குண்டுகள் விழுந்தன. ஒரு ஜெர்மன் விமானம் சுட்டு அழிக்கப்பட்டது.

சென்ற வாரத்தில், பிரிட்டனின் வெடி குண்டுகளினால் மே மீ"த்தில் இறந்து போனவர்கள் முதலியவர்களின் கணக்கு வெளியிடப்பட்டிருக்கிறது. இறந்து போனவர்கள் 5,394 (இதில் 2,512 ஆண்கள், 1,994 பெண்கள், 16 வயதுக்குட்பட்டவர்கள் 753, விவரம் கிடைக்காதவர்கள் 135); காயமடைந்தவர்கள் 5,181 (இதில் 2,930 ஆண்கள், 1,835 பெண்கள், 16 வயதுக்குட்பட்டவர்கள் 416); காணமற்போனவர்கள் 75 (இதில் ஆண்கள் 31, பெண்கள் 25, குழந்தைகள் 19). காணமற் போனவர்கள் எல்லோரும் இறந்து போனார்கள் என்று கருதப்படுகிறது. மே மாதத்தில் ஏற்பட்ட சேதம், ஏப்ரல் மாதத்தில் இருந்ததை விட 2,000-க்கு மேல் குறைந்திருக்கிறது; ஆனால் சென்ற வருஷம் நவம்பர் மாதத்திற்குப் பிறகு இதுதான் அதிகமான சேதத்தில் இரண்டாவதாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஜெர்மன் விமானப்போர் சென்ற வருஷம் செப்டம்பர் மாதத்தில் ஆரம்பித்ததிலிருந்து இதுவரை, யுத்தத்தில் சம்பந்தப்படாத சாதாரண ஜனங்கள்

வெடி குண்டுகளினால் சேதமடைந்தவர்கள் (இறந்து போனவர்களும், காயமடைந்தவர்களும்) மொத்தம் 39, 678.

ஜூன்மீ 14-ந் தேதி சாயங்காலத்தோடு முடிவான ஒரு வாரத்தில், பிரிட்டிஷ் ஆகாய விமானப்படையாலும் கடற் படையாலும், ஐரோப்பாவிலும், மத்திய கிழக்கரங்கத்திலும் அழிக்கப்பட்ட அச்சு விமானங்கள் 78. எல்லா யுத்த அரங்கங்களிலும் அதே வாரத்தில் இழக்கப்பட்ட பிரிட்டிஷ் விமானங்கள் 46.

இங்கிலீஷ் கால்வாயின்மேல் செவ்வாய்க்கிழமை நடந்த யுத்தத்தில், 13 எதிரி விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. பிரிட்டிஷ் விமானங்கள் வடக்கு பிரான்சு, பெதூன், மேற்கு ஜெர்மனியிலுள்ள கலோன், தூசல்தார்ப் முதலிய இடங்கள், ராட்டர்டம், ஆஸ்டெண்டு, பலோன், சேர்பர்க் முதலிய இடங்கள், இவைகளின்மேல் வெடிகுண்டுகளைப் போட்டன.

## 2. ஆப்பிரிக்காவும், மத்தியத்தரைக்கடலும்.

வடக்கு ஆப்பிரிக்காவில், சோலும் பிரதேசத்தில், பிரிட்டிஷ் துருப்புகள் முன்னேறிச் செல்கின்றன. சோலும் யுத்த அரங்கத்தில் பிரிட்டிஷ் படை பலமாகத் தாக்கிக்கொண்டிருக்கிறது என்று ஜெர்மன் சமாச்சார ஸ்தாபனம் கூறுகிறது.

பார்டியாவுக்கு 40 மைல் மேற்கில், காம்புட் பிரதேசத்தில், ஒரு இத்தாலியப் படையை, பிரிட்டிஷ் துருப்புகள் திடீரென்று தாக்கின. இத்தாலிய மோட்டார் வண்டிகள் 12 நாசமாக்கப்பட்டன.

மேற்குப் பாலைவனத்தில் நடக்கும் இந்தப் போரில், பிரிட்டிஷ் துருப்புகளும், இந்தியத் துருப்புகளும் ஈடுபட்டிருக்கின்றன. ஹால்பயா என்ற இடத்துக்கு மேற்கில் சண்டை நடந்துகொண்டிருக்கிறது.

அபிசீனியாவில் இத்தாலியர்கள் பின்வாங்கிச் சென்றுகொண்டிருக்கிறார்கள். தென் கிழக்கு அபிசீனியாவிலிருந்து இத்தாலியர்கள், மாஜி என்ற இடத்துக்குத் தென் கிழக்கிலுள்ள பாகோ என்ற கிராமத்துக்குப் பின்வாங்கினார்கள்.

சோலா பிரதேசத்தில், 2,000 இத்தாலியர்களோடு, இத்தாலிய தளகர்த்தர் பிராலோர்மோ பிரிட்டிஷாரிடம் சரணாகதியடைந்தார். எரிச் சண்டை என்ற பிரபல சண்டைக்குப் பின்பிறகு, இந்த இத்தாலிய தளகர்த்தரும் அவருடைய துருப்புகளும் மலைகளில் போய் மறைந்து கொண்டார்கள். அபிசீனிய தேசாபிமானப் படை அவர்களுக்கு மிகுந்த தொந்தரவு கொடுத்துக் கொண்டுவந்தது. கடைசியில், உணவில்லாத கஷ்டத்தினால், அவர்கள் முன் கூறியபடி சரணாகதியடைந்தார்கள்.

அசாப் பிரதேசத்தில், மக்காரா என்ற முக்கியமான ஆகாய விமானச்சாலையை, நமது துருப்புகள் கைப்பற்றிக்கொண்டன. ஜிம்மா பிரதேசத்தில் அபிசீனிய தேசாபிமானப்படை எதிரிகளோடு போராடிக்கொண்டிருக்கிறது. ஆனால், ஜிம்மா ராணுவ சம்பந்தமும், அரசியல் சம்பந்தமும் இல்லாத இடமாயிருக்கின்றது.

பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை, ஆப்பிரிக்காவில் எதிரிகளுடைய இடங்களைப் பலதடவை தாக்கிற்று. பென்காசி ஏழுதடவை தாக்கப்பட்டது; தார்னு ஐந்து தடவை தாக்கப்பட்டது. மார்தூபா, பெனினு, காசாலா பார்சி, எல்குப்பா, கலாடோ, ரோட்ஸ் முதலிய இடங்களின் மேல், பிரிட்டிஷ் விமானங்கள் வெடிகுண்டுகளைப் போட்டன.

அலெக்சாண்ட்ரியாவில் ஜெர்மன் வெடிகுண்டுகளால் நேர்ந்த கோரக்காட்சிகள் பலவற்றை, அராபியப் பத்திரிகைகள் படங்களாக வெளியிட்டிருக்கின்றன. எகிப்தியர்கள் நூற்றுக்கு மேல் கொலைப்பட்டார்கள்; அவர்களில் பெரும்பாலோர் ஏழை மக்கள். அநேகர் காயப்பட்டார்கள். எகிப்தியர்களின் சிறு வீடுகள் பல நாசமாக்கப்பட்டன. வீடிழந்த மக்கள் திண்டாடுகிறார்கள். இதைப்பற்றிய படங்கள் அராபியப்பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

மால்டாவைத்தாக்க எதிரிகளின் ஆகாய விமானங்கள் கூட்டமாய் வந்தன. அவைகளைப் பிரிட்டிஷ் விமானங்கள் குறுக்கிட்டுத் தடுத்தன. நடந்த சண்டையில் 11 எதிரி விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

1940-ம்வரு செப்டம்பர் மாதத்துக்குப்பிறகு, முதல் தடவையாக ஜிப்ரால்டரின் மேல் எதிரி விமானங்கள் வெடிகுண்டுகளைப் போட்டன. உடனே விமான எதிர்ப்பு பீரங்கிகள் அவைகளை நோக்கிச் சுட்டன. யாதொரு சேதமும் ஏற்படவில்லை. ஒரு கிராமத்தானுக்கு மாத்திரம் சிறிது காயம் ஏற்பட்டது.

மத்தியதரைக் கடலின் மத்திய பாகத்தில், எதிரிகளின் வர்த்தகக்கப்பல்கள், யுத்தக்கப்பல்களால் பாதுகாக்கப்பட்டுப் போய்க்கொண்டிருந்தன. பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் அவைகளை நன்றாகத் தாக்கின. 7 000 டன் எடையுள்ள ஒரு வர்த்தகக் கப்பலின்மேல் அநேக வெடிகுண்டுகள் விழுந்தன; உடனே அக்கப்பலில் நெருப்புப் பிடித்துக்கொண்டது; கப்பல் இனி மேல் ஒன்றுக்கும் பிரயோசனப்படாது என்று சொல்லப்படுகிறது.

கிழக்கு மத்தியதரைக்கடலிலுள்ள சைப்ரஸ் தீவில் எல்லாவித பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.

லிபியாவில் பெரிய யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது. எதிரிகளுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டிருக்கிறது. 20 எதிரி விமானங்கள் சுட்டு நாசமாக்கப்பட்டன.

## 3. அமெரிக்காவும், அட்லாண்டிக் கடலும்.

பிரிட்டனுக்கு உதவிசெய்வது என்ற விஷயத்திற்காக, பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட், மிஸ்டர் ஹாரிமன் என்பவரைத் தன்னுடைய பிரத்தியேக பிரதிநிதியாக நியமித்திருந்தார்; அவர் லிஸ்பனிலிருந்து (போர்ச்சுகல் தலைநகரம்) எகிப்துக்கு விமானமார்க்கமாகச் சென்றார்.

ஏகாதிபத்திய விமானப் பயிற்சித் திட்டத்தின்கீழ், 700 பிரிட்டிஷ் விமானிகள், பயிற்சிக்காக, கனடாவுக்குச் சென்றிருக்கிறார்கள். இவர்களில் 100 பேர் அமெரிக்காவுக்கு அதாவது அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குச் சென்றார்கள். அங்கு அவர்கள் மிக விமரிசையாக வரவேற்கப்பட்டார்கள்.

கனடாவின் முதல் மந்திரி, மிஸ்டர் மெகன்சி கிங், பிரிட்டனுக்குக் கனடா அனுப்பிக்கொண்டுவரும் உதவியைப்பற்றித் தெரிவித்தார். ஒவ்வொரு மாதமும் அநேக கனடா நாட்டு சிப்பாய்களும், யுத்த சாமான்களும், பிரிட்டனுடைய பாதுகாப்புத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு வருகின்றன. இந்த வருஷம், இரண்டு பெரும் படைகள் பிரிட்டனுக்கு அனுப்பப்படும்; அவைகளில் ஒன்று பூரண யுத்த முஸ்தீப்புடன் பிரிட்டனுக்குச் செல்லும். 1,000-க்கு மேற்பட்ட ரேடியோ யந்திர நிபுணர்கள் பிரிட்டனுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள்; இன்னும் அநேகர் அனுப்பப்படுவார்கள். கனடாவிலிருந்து அனுப்பப்படும் யுத்த சாமான்கள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. உணவுச் சாமான்களும் அனுப்பப்படுகின்றன. கனடாவின் சிப்பாய்கள் எங்கு வேண்டுமானாலும், பிரதம தளகர்த்த சபையால் அனுப்பப்படலாமென்றும், அதற்கு யாதொரு தடையும் ஏற்படுத்தப்படவில்லையென்றும், மிஸ்டர் மெகன்சி கிங் அறிவித்தார்.

அமெரிக்காவில் மோடார்கார்கள் செய்வதைக் குறைத்துவிட்டு, அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் மனிதர்களையும் சாமான்களையும், ஆகாய விமானங்கள் செய்வதற்கும், 'டாங்கி'கள் செய்வதற்கும், உபயோகப்படுத்துவதற்காக ஒரு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகஸ்டுமீ 1-ந் தேதியிலிருந்து வழக்கமாக செய்யப்படும் மோடார்கார்களில் 100-க்கு 20 வீதம் குறைக்கப்பட்டிருக்கிறது. கூடிய சீக்கிரத்தில் 100-க்கு 30 அல்லது 40 வீதம் மோடார் செய்வது குறைக்கப்படும் என்று தெரிகிறது.

கனடாவில் அதிக தூரம் சுடக்கூடிய புதிய கப்பல்கள் செய்யப்படுகின்றன. அதனுடைய டன் எடை, குரூய்சர் என்ற யுத்தக்கப்பலுக்கும், நாசகாரி ('டிஸ்டிராயர்') என்ற யுத்தக்கப்பலுக்கும் இடையில் இருக்கும்.

"ராபின் மூர்" என்ற அமெரிக்க வியாபாரக்கப்பல் அட்லாண்டிக் கடலில், ஜெர்மனியால் முழுகடிக்கப்பட்டதைக் குறித்து, மிஸ்டர் சம்னர் வெல்ஸ் (அமெரிக்காவின் உதவி அரசியல் மந்திரி) கண்டித்துக் கூறியிருக்கிறார். அமெரிக்க வியாபாரக் கப்பல் யுத்தம் நடக்கும் இடத்துக்கு வெகு தூரத்தில்

இருந்தது ; யுத்த சம்பந்தமான எந்த இடத்துக்கும் அது போவதாக இல்லை ; ஆட்சேபனை செய்யத் தகுந்த எந்த வித சாமான்களையும் அது கொண்டு போகவில்லை ; அப்படியிருக்கும்போது, அதை முழுகடித்த ஜெர்மனியின் செய்கை அகில தேசீய சட்டத்துக்கும், மனிதத் தன்மைக்கும் விரோதமானது என்று மிஸ்டர் சம்னர் வெல்ஸ் கூறினார்.

இந்த விஷயத்தைக்குறித்து எழுதிய "வாஷிங்டன் போஸ்ட்" என்ற பத்திரிகை, அமெரிகா உடனே யுத்தத்தில் ஈடுபடவேண்டுமென்ற அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கிறது. யுத்தத்தில் ஈடுபட்டது போன்ற நிலைமையிலிருப்பதைவிட, யாதொரு ஏமாற்றமும் இல்லாமல், நேர்முகமாக யுத்தத்தில் ஈடுபடுவது தான் நல்லது என்றும், அமெரிக்காவின் கொள்கை ஹிட்லரால் அவமதிக்கப்பட்டிருக்கிறதென்பது "ராபின மூர்" சம்பவத்தால் தெரிகிறதென்றும், ஆகையால் உடனே ஹிட்லரை எதிர்த்துப் போராடவேண்டுமென்றும், அப்பத்திரிகை கூறுகிறது.

அமெரிக்க பொக்கிஷ இலாகா மந்திரியாயிருக்கும் மிஸ்டர் மார்கந்தோ இதைப்போன்ற அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார். "போர் செய்வதற்குத் தயாராயில்லாமல், அமெரிக்க மக்கள் தங்களுடைய சுதந்தரத்தைப் பாதுகாக்க முடியாது. கொடுங்கோன்மையை ஒழிக்கவேண்டுமானால், உடனே நாம் முயற்சி செய்யவேண்டும். முழங்காற்படியிட்டு ஹிட்லருக்கு வணங்கி வாழ்வதைவிட, மனிதத்தன்மையுடன் நின்று உயிர்விடுவது நல்லதென்றால், இப்போது நாம் ஒரு முடிவுக்கு வந்துவிடவேண்டும்" என்று மிஸ்டர் மார்கந்தோ கூறினார்.

நியூயார்க் துறைமுகத்தின் விரிகுடாவின் கீழ் பாகத்தில், 'மைன்' என்ற கடலில் மிதக்கும் வெடி குண்டுகள் இரண்டு மைல் சதுர விஸ்தீரணத்தில் மிதக்க விடப்படுமென்றும், துறைமுகத்துக்கு வரும் கப்பல்கள் எச்சரிக்கப்படுகின்றனவென்றும், அறிவிக்கப்பட்டது.

ஒரு மாதத்திற்கு 500 வெடிகுண்டு விமானங்கள் செய்யவேண்டுமென்ற திட்டத்தின்கீழ், விமானம் செய்யும் தொழிற்சாலைகள் கட்டுவதற்காக 100 கோடி டாலர் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது.

12 லட்சத்து 50 ஆயிரம் டன் எடையுள்ள வியாபாரக் கப்பல்கள், இந்த வருஷம் அமெரிக்கக் கப்பற் சாலைகளில் கட்டப்படும், என்று அமெரிக்க கப்பற் கமிட்டி திட்டம் போட்டிருக்கிறது. 1943-ம் வருஷத்தில் 35 லட்சம் எடையுள்ள கப்பல்கள் கட்டப்படும் என்றும், அதற்கடுத்த வருஷம் 50 லட்சம் டன் கப்பல்கள் கட்டப்படும் என்றும் சொல்லப்படுகிறது. இப்போது கட்டப்படும் 7[illegible]5 வியாபாரக் கப்பல்களின் விலை 162 கோடி டாலர் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவில் உள்ள ராசெஸ்டர் சர்வகலாசாலை பிரிட்டிஷ் முதல் மந்திரி, மிஸ்டர் சர்ச்சிலுக்கு, 'டாக்டர் அப் லாஸ்' என்ற பட்டத்தை அளித்திருக்கிறது. அந்தப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டு, மிஸ்டர் சர்ச்சில் ரேடியோ மூலம் ஒரு பிரசங்கம் செய்தார். அதில் அமெரிக்காவும், பிரிட்டனும் ஒன்று சேர்ந்தால் உலக சுதந்தரத்தைக் காக்கலாம் என்று வற்புறுத்திக் கூறினார்.

அமெரிக்காவின் பாங்கிகளிலுள்ள ஜெர்மனியர்கள் பணத்தையும், இத்தாலியர்கள் பணத்தையும், இன்னும் ஜெர்மனியின் ஆதிக்கத்திலுள்ள நாட்டினர் பணத்தையும், அவர்கள் யுத்தகாலம் வரைக்கும் திருப்பி வாங்கக்கூடாதென்று, பிரசிடெண்டு ரூஸ்வெல்ட் ஒரு உத்தரவிட்டிருக்கிறார். இது தேசத்தின் நெருக்கடியான நிலைமையை உத்தேசித்துத் தான் செய்யப்பட்டிருக்கிறது என்று அறிவிக்கப்பட்டது. இந்த உத்தரவை மீறி நடப்பவர்கள் கடுமையான தண்டனைக்குள்ளாவார்கள் என்று பிரசிடெண்ட் மாளிகையிலிருந்து தெரிவிக்கப்பட்டது. அமெரிக்க பாங்கிகளில உள்ள அச்சுநாட்டுப் பணம் 20 கோடி டாலர் என்று சொல்லப்படுகிறது. வேறு மனிதர்களுடைய பேர்களின் கீழ் ஏராளமான பணம் பதிவு செய்யப்பட்டிருக்கவேண்டும் என்று ஒரு உத்தியோகஸ்தர் நம்புகிறார்.

அமெரிக்காவில் உள்ள ஜெர்மன் ஸ்தானீகர்களின் காரியாலயங்கள் மூடப்பட்டன ; அவைகளில் வேலை செய்த ஜெர்மானியர்கள் வெளியில் போகும்படி உத்தரவிடப்பட்டார்கள். இதை ஆட்சேபித்து ஜெர்மனி அமெரிக்காவுக்கு ஒரு அறிக்கை அனுப்பியிருக்கிறது. ஆனால் அந்த ஆட்சேபனையை அமெரிக்கா நிராகரித்து விடுமென்று மிஸ்டர் சம்னர் வெல்ஸ் (அமெரிக்க அரசியல் உதவி மந்திரி) கூறினார்.

### 4. கிரீசும், இத்தாலியும்.

கிரேக்கத் துருப்புகள், கிரீஸ் யுத்தத்திலும், கிரீட் யுத்தத்திலும் மிகுந்த தைரியத்துடன் போர்புரிந்ததைப் பாராட்டி, பிரிடிஷ் மன்னர் ஜார்ஜ், கிரேக்க அரசர் ஜார்ஜுக்கு ஒரு செய்தி அனுப்பினார். அதற்கு அனுப்பிய பதிலில், கிரீஸ் யுத்தத்திலும் அதன் முடிவான கிரீட் யுத்தத்திலும், காட்டப்பட்ட பிரிட்டிஷ் துருப்புகளின் வீரச் செய்கைகள் சரித்திரத்தில், பொன்னான எழுத்தில் பொறிக்கப்படும், என்று கிரேக்க அரசர் கூறியிருக்கிறார்.

இத்தாலியின் அயல் நாட்டு மந்திரி, கவுண்ட் சியானோவும், ஜெர்மனியின் அயல் நாட்டு மந்திரி, ரிப்பனதார்ப்பும், வெனிஸ் நகரத்தில் சந்தித்தார்களென்றும் அப்போது புதிதாக ஏற்படுத்தப்பட்ட குரோஷியா என்ற நாடு அச்சு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது என்றும் தெரிகிறது.

பிரிட்டிஷாரால் பிடிக்கப்பட்ட இத்தாலியக் கைதிகள் மொத்தம் 2 லட்சத்து 44 ஆயிரம் என்று பிரிட்டிஷ் பார்லிமெண்டில் யுத்த மந்திரி ஒரு கேள்விக்குப் பதிலளித்தார்.

### 5. பால்கன்ஸ், துருக்கி, இராக், சிரியா முதலியன.

சிரியாவில், நேசதேசத்துருப்புகள் தலைநகரான டமாஸ்கஸ்ஸை நெருங்கிச்சென்றுகொண்டிருக்கின்றன. டமாஸ்கசுக்குப் போகும் வழியில் இருக்கும் ஜெப்பல்மதானி என்ற இடம் கைப்பற்றப்பட்டது. பின்பு டமாஸ்கசுக்குத் தென்மேற்கில் 6 மைல் தூரத்தில் உள்ள ஆர்தூஸ் என்ற இடத்தை, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துருப்புகளும், சுதந்தர பிரெஞ்சு துருப்புகளும் தாக்கிக்கொண்டு இருக்கின்றன. சுதந்தர பிரெஞ்சுத் துருப்புகளின் தளகர்த்தர் ஜெனரல் லூஷான்தில்ஹம், வெடிகுண்டு சிதள் கையில் பட்டு காயமடைந்ததால் கொஞ்சநாள் சிகிச்சையிலிருந்து, குணமடைந்து, இப்போதும் மீண்டும் தலைமை வேலையை மேற்கொண்டார்.

சிடானைப் பிடித்தபோது சிரியாவின் கரையோரத்திலிருந்த பிரிட்டிஷ் கப்பல்கள், பிரிட்டிஷ் தரைப் படைகளுக்கு உதவி செய்தன என்று தெரிகிறது. சிடானைக் கைப்பற்றியபோது, விஷி 'டாங்கி' கள் ஏழும், வெடிகுண்டு சாமான்களும் கிடைத்தன. 'டாங்கி' களில் இரண்டு நன்றாய் வேலை செய்யக் கூடியவை.

விஷி துருப்புகள் பலமாக எதிர்த்து நிற்பதற்கு ஒரு காரணம் சொல்லப்படுகிறது. நேசதேசத் துருப்புகள் சிரியாவுக்குள் பிரவேசிப்பதற்கு அதிக காலத்துக்கு முன்பே, டமாஸ்கசைப் பாதுகாக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஏனென்றால் யுத்த நோக்கத்துடன் இருந்த ஜெபல் ட்ரூஸ் கூட்டத்தாரால் டமாஸ்கஸ் தாக்கப்படும் என்று பயந்து முன்னமேயே பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

சிரியாவின் கரையோரத்தில், ஒரு பிரெஞ்சு நாசகாரி கப்பல் முழுகடிக்கப்பட்டது. அதில் இறந்துபோன ஏழுபேருடைய உறவினர்களுக்குச் சமாச்சாரம் சொல்லி அனுப்பப்பட்டது என்று விஷி சமாச்சார ஸ்தாபனம் கூறுகிறது.

சிரியாவில், சுதந்தர பிரெஞ்சு துருப்புகளும், பிரிட்டிஷ் துருப்புகளும் பிரவேசித்ததை எகிப்திய பத்திரிகைகள் ஏகமனதுடன் ஆதரித்திருக்கின்றன. 'அல் பலாக்', 'அல் மொகத்தம்', 'அல் வப்த்', 'அல்மஸ்ரி', 'அல்தஸ்தூர்' முதலிய பத்திரிகைகள் இந்தப் பிரவேசத்தை வரவேற்றிருக்கின்றன. "சிரியாவுக்கும், லெபானனுக்கும் சுதந்தரம் அளித்திருப்பது சரித்திரத்திலேயே ஒரு புதிய யுகம் ஆரம்பித்ததைக் காண்பிக்கிறது" என்று 'அல் மொகத்தம்' பத்திரிகை கூறுகிறது. அப்பத்திரிகை கூறுவதாவது :—"இந்தப் பிரதேசங்களைக் கவர்ந்துகொள்வதற்காக, நேச தேசத்தினர் இந்த நாட்டில் பிரவேசிக்க விரும்பவில்லை ; இந்த மக்களுக்குப் பூரண சுதந்தரமும், தங்களுக்கு இஷ்டமான அரசாங்கத்தைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் உரிமையும் அவர்கள் அளிக்க விரும்புகிறார்கள்."

பிரசித்தி பெற்ற லெபானியப் பத்திரிகைக்காரரான ஹெபீப் ஜமாதி என்பவர் கூறுவதாவது:— "பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் போராடுவது நாடு பிடிப்பதற்காக வல்ல. சுதந்தரத்தையும், சுயேச்சையையும், உலகத்திலே நிலை நாட்டுவதற்காகத்தான். அபிசீனியாவுக்குச் சுதந்தரம் தேடிக்கொடுத்த பிரிட்டன் சிரியாவுக்கும், லெபானனுக்கும் சுதந்தர மளிப்பதில் கருத்துக் கொண்டிருக்கிறது. பிரிட்டனும் அதன் நேசநாடுகளும், சிரியாவையும், லெபானனையும், சிரிய மக்களிடமும், லெபானிய மக்களிடமும், ஒப்படைத்துவிடத்தான் விரும்புகின்றன. ஆகவே இன்று பிரிட்டனோடும், சுதந்தர பிரெஞ்சுக்காரரோடும், ஒத்துழைப்பதுதான் சரியான மார்க்கம். சென்ற சிரியப் புரட்சியின்போது, எகிப்தின் சிறந்த கவிஞரான ஷாக்கிபே கூறியதை அவர்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். 'மிகச் சிவந்த சுதந்தரத்துக்கு ஒரே வாசற்படிதான் உண்டு. அந்த வாசற்படியின் கதவை, இரத்தக்கறை தோய்ந்த கையினால் தட்ட வேண்டும்' என்று அக்கவி கூறியிருக்கிறார்."

யூகோஸ்லாவியாவின் அரசர் பீடர் சமீபத்தில் எகிப்துக்குச்சென்று, அங்குள்ள பிரிட்டிஷ் ஸ்தானீகர், சர் மைல்ஸ் லாம்சன், அவர்களின் விருந்தாளியாக இருந்தாரென்று தெரியவருகிறது.

இராக்கில் எல்லாம் அமைதியாக இருக்கிறது என்று பிரிட்டிஷ் ராணுவ தலைமைஸ்தான அறிக்கை கூறுகிறது.

துருக்கியின் மூலமாக, சிரியாவுக்கோ, அல்லது மத்திய கிழக்கரங்கத்துக்கோ ஜெர்மன் துருப்புகள் அனுப்பப்படப்போவதில்லை என்று பர்லினிலுள்ள துருக்கி செய்தி நிலையத்துக்கு உறுதிமொழி யளித்திருப்பதாக அங்காராவில் செய்தி எட்டியிருக்கிறது. கிரீட்டும், ஈஜியன் தீவுகளும், ஜெர்மனியிடம் இருப்பதால், துருக்கி மூலமாகத் துருப்புகள் செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லப்படுகிறது.

துருக்கியில் உள்ள பிரிட்டிஷ் ஸ்தானீகர், சர் ஹியூக் நாச்சிபுல்—ஹியூகெசென், துருக்கியின் அயல்நாட்டு மந்திரியான மிஸ்டர் சரஜோகுளு என்பவரிடம் ஒருமணி நேரம் பேசினார். ருஷ்யாவின் நிலைமையைப் பற்றிப் பேசப்பட்டது என்று தெரிகிறது.

துருக்கிக்கும் இந்தியாவுக்கும் இருக்கும் வியாபாரத்தை அதிகப்படுத்துவதன் சம்பந்தமாக, மிஸ்டர் டார்ஹன் போரே என்ற வர்த்தக மந்திரிசபையின் உத்தியோகஸ்தர், இந்தியாவுக்குக் கூடிய சீக்கிரம் வருவார் என்று தெரிகிறது.

துருக்கியும், ஜெர்மனியும், சென்ற புதன்கிழமை இரவு ஒரு நட்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருக்கின்றன. இரண்டு நாடுகளும், ஒன்றை ஒன்று எதிர்ப்பதில்லையென்றும், நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ விரோதமான காரியமொன்றும் செய்வதில்லை என்றும் ஒப்பந்தத்தில் கண்டிருக்கிறது.

## 6. கப்பல் நிலைமை

"ராபின்மூர்" என்ற அமெரிக்க வர்த்தகக் கப்பல், ஜெர்மன் சப்மரீனால் தாக்கப்பட்டு முழுகடிக்கப்பட்டதைக் குறித்து, அமெரிக்க அரசியல் உதவி மந்திரி, மிஸ்டர் சம்னர் வெல்ஸ், பத்திரிகை நிருபர்களிடம் தம்முடைய கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறார்.

"ட்ரெசிலியன்" என்ற பிரிட்டிஷ் கப்பலிலிருந்த 46 பேர் ஒரு அமெரிக்கக்கப்பலால் வடக்கு அட்லாண்டிக் கடலில் தப்புவிக்கப்பட்டார்கள். அந்தக் கப்பல் என்னுயிற்று என்பது தெரியவில்லை.

"கெம்மண்டின்" என்ற பிரிட்டிஷ் கப்பலில் இருந்து எட்டு பேர், கப்பல் முழுகடிக்கப்பட்ட 11 மாதங்களுக்குப்பிறகு, பிரிட்டனுக்கு வந்து சேர்ந்தார்கள். அந்தக் கப்பல் இந்திய சமுத்திரத்தில் ஒரு ஜெர்மன் கப்பலால் 1940-ம்வரூ ஜூலைமீ 13-ம் தேதி தாக்கப்பட்டு முழுக்கடிக்கப்பட்டது.

"ஜர்சி" என்ற பிரிட்டிஷ் நசகாரிக் கப்பல் எதிரிகளின் கடல் வெடிகுண்டு தாக்கி முழுகிவிட்டது என்று பிரிட்டிஷ் கடற்படை மந்திரி சபை அறிவிக்கிறது. "ஜர்சி" 1,690 டன் எடையுள்ள கப்பல்.

'பிஸ்மார்க்'குக்குப் பதிலாக வடக்கு அட்லாண்டிக் கடலில் சாமான் கொண்டுவரும் கப்பல்களைத் தாக்குவதற்காக ஒரு ஜெர்மன் 'பாக்கெட்' யுத்தக் கப்பல் அனுப்பப்பட்டதாகத் தெரிகிறது. அந்தக் கப்பல் (அதன் பெயர் 'லூயர்சோ' அல்லது 'அட்மிரல் ஷீர்' என்று நம்பப்படுகிறது) ஒரு பிரிட்டிஷ் விமானத்தால் தாக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டது. இது நார்வேயின் தெற்குக் கடலில் நடந்த சம்பவம்.

10 இத்தாலியகப்பல்கள் பிரிட்டிஷ் சப்மரீன் தாக்குதலினால், மத்தியதரைக் கடலில் முழுகடிக்கப்பட்டன. ஒரு ஜெர்மன் 'சப்ளை' கப்பல் முழுகடிக்கப்பட்டது. ஜூன்மீ 13-ம் தேதியோடு முடிவான வாரத்தில் 20,000 டன் எடையுள்ள எதிரிக்கப்பல்கள் பிரிட்டிஷ் விமானங்களால் முழுகடிக்கப்பட்டன.

ஜெர்மனியின் கப்பற்படையின்பலம் இப்போது மிகவும் குறைந்திருக்கிறது. முதலில் இருந்த மூன்று 'பாக்கெட்' யுத்தக்கப்பல்களில், இப்போது ஒன்றுதான் மிகுதியாய் இருக்கிறது. 'பாக்கெட்' யுத்தக் கப்பல்கள் மெல்லிய தகடுகளால் அடிக்கப்பட்டிருப்பதால், பலமான வெடிகுண்டுத்தாக்குதலைத் தாங்க முடியாதென்று கப்பல் நிபுணர்கள் கூறுகிறார்கள். மற்றும், ஜர்மனியின் சிறந்த கப்பல்கள் அதற்குப் பிரயோசனமில்லாமற் போய்விட்டன. அட்லாண்டிக் கடலில், 'பிஸ்மார்க்' கப்பல் முழுகடிக்கப்பட்டது. 'ஷார்ன் ஹார்ஸ்ட்', 'நீசனோ' என்ற பெரிய ஜெர்மன் கப்பல்கள் (ஒவ்வொன்றும் 26,000 டன் எடையுள்ளது), பிரெஸ்ட் துறைமுகத்தில் பிரிட்டிஷ் விமானங்களால் இரண்டு மாதங்களாகத் தாக்கப்பட்டு, பழுதாக்கப்பட்டிருக்கின்றன. 'பிஸ்மார்க்' கின் துணைக் கப்பல், 'திரிபீட்ஸ்,' 34 000 டன் எடையுள்ளது, இதுவரையில் வெளியில் தலைகாட்டவே இல்லை. "பிரின்ஸ் யூஜீன்" என்ற 10,000 டன் யுத்தக்கப்பல் பிரெஸ்டில் இருக்கிறது; அதுவும் பிரிட்டிஷ் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டிருக்கிறது.

கிரேக்கக் கடற்படைக்குச்சேர்ந்த, ஒரு 'குரூய்சர்' கப்பல், ஏழு நாசகாரிக்கப்பல்கள், இரண்டு 'டார்பிடோ' கப்பல்கள், ஐந்து சப்மரீன்கள்,—இவைகளெல்லாம் அலெக்சாண்டிரியாவுக்குப்போய் பிரிட்டிஷ் மத்தியதரைக் கடற்படையுடன் சேர்ந்துகொண்டன.

## 7 தூரக் கிழக்கு அரங்கம்.

யாங்டிஸ் நதிக்குத் தெற்கிலுள்ள சீனாவின் யுத்த தலைநகரமாகிய சுங்கிங்கின்மேல், 27 ஜப்பானிய விமானங்கள் வெடிகுண்டுகளைப்போட்டு, பலத்த சேதத்தை உண்டாக்கின. அமெரிக்க ஸ்தானீகர் காரியாலயமும், அதற்கருகிலிருந்த பீரங்கிக்கப்பல் 'டுடிலா' வும் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டன. ஒரு பெரிய வெடிகுண்டு ஏழைமக்கள் வசிக்கும் இடத்தில் விழுந்து பல வீடுகளை நாசமாக்கிவிட்டது. அந்த வீடுகள் அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கத்தாரால் கட்டப்பட்டது; கட்டுவதற்கு இரண்டு லட்சம் சீன டாலர்கள் செலவாயிற்று. ஒரு பிரிட்டிஷ் கம்பெனியின் பண்டகசாலையும், ஒரு அமெரிக்கருடைய 'ஐஸ்' தொழிற்சாலையும், ஸ்டாண்டர்டு ஆயில் கம்பெனியின் காரியாலயங்களும் வெடிகுண்டுகளால் நாசமாக்கப்பட்டன.


100 யுத்தக்கப்பல்களடங்கிய ஒரு ஜப்பான் கடற்படை சீகியாங் கரையிலிருந்து தெற்கு நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. இதனால் தெற்கு பசிபிக் சமுத்திரத்தில், ஜப்பான் ஏதோ ஒரு முக்கியமான வேலை செய்யப்போகிறதாகத் தெரிகிறது. இந்தக் கடற்படையில், 'குரூய்சர்' வகுப்பைச்சேர்ந்த ஒரு பெரிய யுத்தக்கப்பலும், ஆகாய விமானங்கள் தாங்கிச்செல்லும் ஒரு பெருங்கப்பலும், கூடச்செல்கின்றன. டச்சு கிழக்கிந்திய தீவுகளை மிரட்டி, ஜப்பான் சில பொருளாதார சௌகரியங்களைப் பெறுவதற்காக இப்படிச்செய்கிறதென்று நினைப்பதற்கு இடமிருக்கிறது.

லண்டனிலுள்ள ஜப்பானிய ஸ்தானீகர், மிஸ்டர் ஷிகமிட்சு, டோக்கியோவுக்கு (ஜப்பானின் தலைநகரம்) புறப்பட்டுப் போயிருக்கிறார். ஆகாய விமான மூலமாக அட்லாண்டிக் கடலையும், அமெரிக்காவையும் தாண்டிவிட்டு, அங்கிருந்து கடல்வழியாக ஜப்பானுக்குப்போய்ச் சேருவார்; ஜப்பானிய அயல்நாட்டு மந்திரி, மிஸ்டர் மத்சுகாவிடம் கலந்து பேசிவிட்டு, பிறகு லண்டனுக்குத் திரும்பிவருவார்.

சீனாவில், ஜப்பானிய ஆதிக்கத்தின் கீழிருக்கும் நான்கிங் அரசாங்கத்தின் முதல் மந்திரி, ஜெனரல் வாங்சிங்வீ, டோக்யோவுக்கு வந்து சேர்ந்தார். அவருக்கு ஆடம்பரமான வரவேற்பு அளிக்கப்பட்டது. ஜப்பானும் சீனாவும் எதிர்காலத்தில் இணைபிரியாமல் இருக்கும் தன்மைக்கு, இந்த வரவேற்பு ஒரு

# சிங்கப்பூரின் கேந்திர ஸ்தானத்தை விளக்கும் படம்


அளவு 1 அங்குலம் 320 மைல்கள்




Reg. No. 69/2 Copies 9700

Heliozinco., Survey Office, Madras. 1941.

## பிரிட்டிஷ் 'குரூய்சர்கள்' முன்னேறிப்போய்க்கொண்டிருக்கின்றன.



**பிரிட்டிஷ் சைனியத்தில் அனேக விதமான டாங்குகள் உள்ளன. மேலே காணும் யுத்த மெஷீன்கள் பயிற்சியிலீடுபட்டிருக்கும்போது அவைகளுக்கு குரூய்சர் டாங்குகள் என்று பெயர். அவைகள் மிகவும் வேகமாகச் சென்று விரோதிகளை வாட்டக்கூடியவை.**

---

அறிகுறியாகும் என்று டோக்கியோ பத்திரிகைகள் எழுதுகின்றன

தாய்லாந்துக்கும், பிரிட்டனுக்கும் அபிப்பிராய பேதம் உண்டாக்குவதற்காக ஜப்பான் முயற்சி செய்கிறதென்று தெரிகிறது. ஜப்பானுக்கு அனுகூலமாக உள்ள தாய்லாந்து மந்திரி சபையைக் கவிழ்ப்பதற்கு, பிரிட்டன் முயற்சி செய்கிறதென்று ஒரு ஜப்பானியப் பத்திரிகை கூறுகிறது. ஆனால் இது உண்மையல்ல. மலேயாவில் இருக்கும் பிரிட்டிஷ் அதிகாரிகள், தாய்லாந்து அரசாங்கத்துக்கு விரோதமானவர்களை மலேயாவின் எல்லைக்கு அப்பால் போகும்படி உத்தரவிட்டிருக்கிறார்கள்.

ஜப்பானில் உள்ள அமெரிக்கஸ்தானீகர், மிஸ்டர் ஜோசப் குரூ, ஜப்பானிய அயல்நாட்டு மந்திரி, மிஸ்டர் மத்சூகாவைக் கண்டு பேசினார்.

சுங்கிங்கில், அமெரிக்க ஸ்தானீகர் காரியாலயமும், அமெரிக்க பீரங்கிக்கப்பல் 'டுடிலா'வும் ஜப்பானிய வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டது வேண்டுமென்றே யல்லவென்றும், தற்செயலாக சில வெடிகுண்டுகள் தவறி அவைகளின்மேல் விழுந்தன என்றும், ஒரு ஜப்பானிய கடற்படை உத்தியோகஸ்தர், பத்திரிகை நிருபர்களிடம் கூறினர்.

### 8. விஷி.

விஷி அரசாங்கத்தின் முதல் மந்திரி, மார்ஷல் பீத்தான், தான் உத்தியோகத்துக்கு வந்த முதல் வருஷப்பூர்த்தி விழாக் கொண்டாட்டத்தின்போது, ஒரு 'ரேடியோ' பிரசங்கம் செய்தார். அதில் சிரியாவைப்பற்றி ஒரு வார்த்தைகூட கூறவில்லை. தங்களுடைய குறைகளுக்காக, பிரெஞ்சு மக்கள் இன்னும் அதிகமாகக் கஷ்டப்படவேண்டுமென்று அவர் எச்சரிக்கை செய்தார்.

விஷி அரசாங்கம், ஜெர்மனியுடன் அளவுக்கு அதிகமான நேசம் கொண்டிருப்பதால், இனிமேல் பிரான்சுக்கு அமெரிக்காவிலிருந்து உணவுப்பொருள்கள் அனுப்பக்கூடாதென்று, அமெரிக்க அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

சிரியா விஷயமாக விஷி அரசாங்கம் செய்த ஆட்சேபனைக்கு, பிரிட்டன் பதிலளித்திருக்கிறது. சிரியாவில் தனக்கு நில சம்பந்தமான ஆசை கிடையாதென்றும், அங்குள்ள தளங்களை ஜெர்மனி உபயோகப்படுத்தாமலிருப்பதற்காக தான் பிரவேசித்ததாகவும் கூறியிருக்கிறது.

பொருளாதாரத் துறையிலும், தொழிற்சாலைத் துறையிலும், விஷியினுடைய ஒத்துழைப்பை அதிகமாக ஜெர்மனி விரும்புகிறது. இத்தாலி ஜெர்மனிக்கு ஒரு இடைஞ்சலா யிருக்கிறதே ஒழிய உதவியாயில்லை.

### 9. ஜெர்மனியின் ஆதிக்கத்திலுள்ள நாடுகள்.

ஹாலந்தை ஜெர்மனி கைப்பற்றிய நாள், ஒரு துக்க நாளாக டச்சுக்காரர்களால் கொண்டாடப்பட்டது. வீட்டு ஜன்னல்களிலிருந்த படுதாக்கள் இறக்கப்பட்டன; தெருக்களில் அன்று ஜனங்கள் நடமாடவேயில்லை.

ஜெர்மனியில் ஒரு லட்சம் டச்சுத்தொழிலாளர்கள் கட்டாய வேலை வாங்கப்படுகிறார்கள். அவர்கள் தங்களுடைய உறவினர்களுக்கு, ஜெர்மனியில் நடக்கும் சமாசாரங்களைத் தெரியப்படுத்துகிறார்கள். ரைன்லாந்து பிரதேசத்திலும், இதர முக்கிய ஸ்தானங்களிலும், பிரிட்டிஷ் விமானங்கள் வெடிகுண்டுகளைப் போட்டு சேதம் விளைவித்த விவரங்களை அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

பெல்ஜியத்தின் அரசர் லியோபால்டு, ஜெர்மனியின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதில்லை. ஜெர்மனிக்குச் சாதகமாக அபிப்பிராயங்களாவது, அறிக்கைகளாவது வெளியிடச் சொன்னால், அதற்கு அவர் உடன்படுவதில்லை. அவர் பிரசல்ஸ்ஸுக்கு வெளியில் கைதியாக இருப்பதாகத் தெரிகிறது.

ருமேனியாவின் "அயர்ன் கார்டு" படைத்தலைவர், ஹோரியா சீமாவும், அவரைப் பின்பற்றுபவர்களும், ஆயுட்கால கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார்கள். ஜெனரல் ஆண்டனெஸ்கூவின் அரசாங்கத்துக்கு எதிரிடையாகக் கிளர்ச்சி செய்தார்கள் என்று அவர்கள்மேல் குற்றம் சாட்டப்பட்டது. போலீஸ் இலாகாவின் தலைவர், அரச குமாரர் சிக்கா, 15 வருஷம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார். பென்ரோ வீசெக் என்ற பழைய உள்நாட்டு மந்திரிக்கும் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

ருமேனியாவின் தலைநகராகிய புகாரெஸ்டில் ஆட்டுக்கறி, காப்பி, டீ, அரிசி, கோதுமை மாவு, சோப்பு, எண்ணெய், துணி, தோல் முதலியன குறைந்துவிட்டனவென்றும் உணவுப்பொருள்கள் வேண்டிய அளவுக்கு இல்லாமையால் மக்கள் கஷ்டப்படுகிறார்களென்றும் ஒரு பத்திரிகை நிருபர் அறிவிக்கிறார்.

### 10. நடுநிலைமை நாடுகள்.

ருஷ்யாவை ஜெர்மனி தாக்குவதற்கு வேண்டிய சகலவிதமான ஏற்பாடுகளையும் செய்திருக்கிறது. ருமேனியாவில் ஏராளமான துருப்புகள் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கின்றன. ருஷ்யா எது நடந்

தானும் அதற்குத் தயாராக இருக்கிறது—இந்த விவரங்கள் அங்காரா (துருக்கியின் தலைநகராம்) விலிருந்து ரேடியோவில் பேசிய மிஸ்டர் வின்ஸ்டன் பார்டெட்டால் கூறப்பட்டிருக்கின்றன. "எங்களுடைய நாட்டைக் காப்பதற்கு நாங்கள் தயாராயிருக்கிறோம்" என்று ருஷ்ய இளைஞர்கள் மாஸ்கோவில் ஒரு பிரம்மாண்டமான கூட்டத்தில் சொன்னார்கள்.

ருஷ்யா—ஜெர்மன் எல்லையில், ஏதோ சண்டை நடந்ததென்றும், ஜெர்மனி ருஷ்யாவைத்தாக்கியதென்றும் கூறப்படும் வதந்திகளை ஜெர்மன் உத்தியோகஸ்தர்கள் மறுக்கிறார்கள்.

ஸ்பெயினின் தலைநகராகிய மாட்ரிட்டில், யூகோஸ்லாவியாவிலிருந்து வந்த 111 பிரிட்டிஷார்கள் வந்து சேர்ந்தார்கள். சிலகாலம் அவர்கள் இத்தாலியில் கைதிகளாயிருந்தார்கள்; பிறகு விடுதலை செய்யப்பட்டார்கள்.

மெக்ஸிகோ துறைமுகங்களில் பிடிக்கப்பட்ட அச்சுக்கப்பல்கள், மெக்ஸிகோவால் ஒரு புதிய காரியத்துக்கு உபயோகப்படுத்தப்பட்டன. வெராகுருஸ்ஸிலிருந்து நியூயார்க் வரைக்கும் உள்ள கப்பல் போக்குவரத்து 'சர்விசில்' அந்தக் கப்பல்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

---

# "வெற்றி கிடைக்கும்வரை விடாமல் போர் செய்வோம்"

## நேச தேச மகாநாட்டுத் தீர்மானம்.

### "புதிய ஐரோப்பாவை ஏற்படுத்த ஜெர்மனியால் முடியாது."

**மிஸ்டர் சர்ச்சிலின் வீரப் பிரசங்கம்.**

ஜெர்மனிக்கு விரோதமாக யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் பிரிட்டன், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகள், நேச நாடுகள் இவைகளின் அரசாங்கப் பிரதிநிதிகளின் மகாநாடு முதன்முதலாக ஜூன் 12-ந் தேதியன்று, பிரிட்டிஷ் அரசர் பிறந்த நாளில், செயின்ட் ஜேம்ஸ் அரண்மனையில் மத்தியானம் 12-மணிக்கு கூடியது. மிஸ்டர் சர்ச்சில், மிஸ்டர் அந்தோனி ஈடன், மிஸ்டர் சி. ஆர். அட்லீ, லார்டு கிரான்போர்ன், லார்டு மாய்னி, சர். ஆர்ச்சிபால்டு சிங்கிளேர் முதலியவர்கள் பிரிட்டனின் பிரதிநிதியாயிருந்தார்கள். லண்டனில் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகளின் பிரதிநிதிகளாயிருக்கும் ஹைகமிஷனர்கள் தத்தம் நாடுகளின் பிரதிநிதியாக வந்திருந்தார்கள். இந்தியா மந்திரி, மிஸ்டர் எல். எஸ். அமெரி இந்தியாவின் பிரதிநிதியாயிருந்தார். கிரீஸ். யூகோஸ்லாவியா, இவைகளின் லண்டன் ஸ்தானீகர்கள், அந்த நாடுகளின் பிரதிநிதிகளாயிருந்தார்கள். இதர நேச தேசங்களுடைய முதல் மந்திரிகள் அவரவர்களின் நாட்டுப் பிரதிநிதிகளாக விளங்கினார்கள். சுதந்தர பிரெஞ்சுக்காரர்களின் தலைவர் ஜெனரல் டிகாலுக்கு பதிலாக, அவருடைய பிரதிநிதி மிஸ்டர் ரெனிகாசான் வந்திருந்தார். மாலையில் பிரிட்டிஷ் அரசர் 6-ம் ஜார்ஜ் வந்தபோது, மிஸ்டர் சர்ச்சில் நேசதேசத் தலைவர்களையும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியப் பிரதிநிதிகளையும் அறிமுகப்படுத்தி வைத்தார்.

நேசதேச மகா நாட்டில், மிஸ்டர் சர்ச்சில் முதலில் பேசினார். வெற்றி நமக்குக் கிடைக்கும் வரைக்கும் அனைவரும் ஒன்று சேர்ந்து போராடுவோம் என்று அவர் கூறினார். அவருடைய பிரசங்கத்தின் விவரங்கள் கீழே தரப்படுகின்றன. மிஸ்டர் சர்ச்சில் கூறியதாவது:—

"நாஸிசத்துக்கு எதிரிடையாக நடக்கும் யுத்தத்தின் 2-வது மாதம் நாம் இங்கே கூடியிருக்கிறோம். நாம் கூடியிருக்கிற இடம் எதிரிகளுடைய தீயினால் சேதப்படுத்தப்பட்ட அந்தப் பழைய செயிண்ட் ஜேம்ஸ் அரண்மனை. சட்டரீதியான ஐரோப்பிய அரசாங்கங்கள் இவ்விடத்தில் கூடியிருக்கின்றன. அவைகளின் நாடுகள் எதிரிகளால் கைப்பற்றப்பட்டன. தங்களுடைய உயர்ந்த நோக்கங்களையும் உறுதியான முடிவுகளையும் உலகத்திற்கு எடுத்துச்சொல்லவும், உலக முழுவதும் உள்ள சுதந்தர மனிதர்களையும் சுதந்தர மக்களையும் உற்சாகப்படுத்துவதற்காகவும் நாம் கூடியிருக்கிறோம். இங்கு ஹிட்லரால் படையெடுக்கப்பட்டு ஹிட்லருடைய கொடுங் கோலாட்சியின் கீழ் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் பத்து நாடுகளின் உரிமைப் பத்திரங்கள் நம் முன் இருக்கின்றன. பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து, தென்னாப்பிரிக்கா, இந்திய ஏகாதிபத்தியம், பர்மா, உலகத்தின் பல பாகத்திலுள்ள பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகள்—எல்லாவற்றினுடைய பிரதிநிதிகளும் இங்கு கூடியிருக்கிறார்கள். அவர்கள் இந்த யுத்தத்தில் ஒரு பெரிய கொள்கைக்காக உறையிலிருந்து கத்தியை எடுத்திருக்கிறார்கள். வெற்றி கிடைக்கும் வரைக்கும், அல்லது உயிர் போகும் வரைக்கும், உயரத் தூக்கிய கத்தி தாழ்த்தப்படப்போவதில்லை. அட்லாண்டிக் கடலுக்கப்பாலிருந்து நமக்கு உதவி செய்வதற்காக தொழிற்சாலைகள் மும்முரமாக வேலை செய்யும் ஒலி நமக்குத் தைரியத்தை கொடுத்து, இன்னும் அதிகமான உதவி வருகிறதென்ற நம்பிக்கையும் கொடுத்து, ஊக்கம் அளிக்கிறது.

"ஐரோப்பாவிலும், உலக முழுவதிலும் ஹிட்லராலும் ஹிட்லரின் கொள்கையாலும், எவ்வளவு துக்கக் காட்சிகள், எவ்வளவு கொடூரச் செய்கைகள், எவ்வளவு குற்றங்கள் நடைபெற்றுவருகின்றன. வார்சா, ராட்டர்டம், பெல்கிரேட் முதலிய இடங்கள் நாசமாக்கப்பட்டன; எதிர்த்துப் போராடாத இந்த பட்டணங்களின் மக்கள்மேல் ஏராளமான வெடிகுண்டுகளைக் குறி பார்த்துப்போட்டு, அவர்களைக் கொன்று அந்தப் பட்டணங்களைப் பாழாக்கி அவைகள் இப்போதிருக்கும் காட்சி வருங்காலத்து மக்கள் இக்கொடுமைகளைப்பற்றி அறிவதற்கு நினைவூட்டும் அறிகுறியாயிருக்கிறது. இங்கு லண்டனிலும் இதர நகரங்களிலும், அயர்லாந்திலும், ஏற்பட்ட நாசத்தின் அடையாளங்களைப் பார்க்கலாம். அவைகளுக்கு பதிலுக்குப் பதில் கொடுக்கப்பட்டு வருகிறது; கூடிய சீக்கிரம் அதற்கு மேற்பட்டு இன்னும் அதிகமாக பழிக்குப் பழிவாங்குவோம்.

### அடிமை நாடுகளின் நிலைமை.

"இதைவிட மோசமானது ஜெர்மனியால் ஜெயிக்கப்பட்ட நாடுகளின் நிலைமை. அங்குள்ள மக்கள் அடிமைகள் என்று சொல்லும்படியாக நடத்தப்படுகிறார்கள். அவர்களுடைய பண்டங்களும் சாமான்களும் கொள்ளையடிக்கப்படுகின்றன, அல்லது மதிப்பில்லாத நாணயத்துக்கு வாங்கப்படுகின்றன. அவர்களுடைய வீடுகளில் தினந்தோறும் நடத்தும் வாழ்க்கை ஜெர்மன் ரகசியப் போலீஸ்காரர்களால் கவனிக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகின்றன. அவர்களுடைய மதங்கள், புராதன பழக்க வழக்கங்கள், கலைகள், சட்டங்கள், ஸ்தாபனங்கள்—இவைகளெல்லாம் பலாத்காரமாக வாவது அல்லது தந்திரமாகவோ அழிக்கப்படுகின்றன. ஐரோப்பா கண்டத்திலுள்ள சிறைச்சாலைகள் போதுமானவையாயில்லை; தனியாகக் கைதிக் கொட்டடிகள் ஏற்படுத்தப்பட்டு அதில் ஏராளமான மக்கள் சிறைப்படுத்தப்படுகிறார்கள். ஒவ்வொரு நாள் அதிகாலையிலும் ஜெர்மன் துப்பாக்கிகள் சுடுகின்றன; தங்களுடைய நாட்டுக்காகவும் கொள்கைக்காகவும் அநேக மக்கள் உயிரிழக்கிறார்கள். செக்கியர்கள், போலந்து தேசத்தைச் சேர்ந்தவர்கள், டச்சுக்காரர்கள், நார்வே நாட்டு மக்கள், யூகோஸ்லாவியர்கள், கிரேக்கர்கள், பிரெஞ்சுக்காரர்கள், பெல்ஜியர்கள், லக்சம்பர்க்கைச் சேர்ந்தவர்கள்—இவர்களெல்லாம் தங்களுடைய உயிரைத் தியாகம் செய்துகொண்டு வருகிறார்கள்.

"ஜெர்மனியால் ஜெயிக்கப்பட்ட நாடுகளில் ஒரு கேவலமான கூட்டம் மக்களை அடிமைப்படுத்துவதற்கு உதவி செய்கிறது. ஜெயித்தவர்கள் சொன்னபடி செய்து, அவர்களுடைய கொடூரத்திட்டங்களுக்கு உதவியளித்து, தங்களுடைய நாட்டு மக்களின் மேலேயே கொடுங்கோலாட்சி பலப்படுவதற்கு செய்ய

வேண்டிய காரியங்களை எல்லாம் செய்வதற்காக, கூலி கொடுத்து துரோகிகள் தயார் செய்யப்படுகிறார்கள். உன்னதமான நிலைமையிலிருந்த ஐரோப்பா எவ்வளவு கேவலமான நிலைமைக்கு வந்துவிட்டது! இம்மாதிரியான கொடுமைகளுக்கு விரோதமாகத்தான் நாம் போராடுகிறோம்.

"இம்மாதிரியான ஆதாரத்தின் மேல் தான் ஹிட்லரின் புதிய ஐரோப்பிய திட்டம் ஏற்படுத்தப்படும்! இதில் ஹிட்லருக்குக் கையாள்களாக முசலோனியும், அட்மிரல் தார்லானும் இருக்கிறார்கள். வெறுப்பு, பேராசை, வகுப்புத்திமிர் இவைகளின் மேல் ஒரு புதிய திட்டம் ஏற்படுத்தப்போகிறார்களாம். இதுவரைக்கும் மனித புத்தியில் இம்மாதிரியான பித்துப்பிடித்த எண்ணம் தோன்றவேயில்லை.

"இந்த யுத்தம் எம்மாதிரியான போக்குகளில் போகும் என்று இப்போது சொல்லமுடியாது. போக்கு கடினமாயிருக்கும் என்பதை நாம் அறிவோம். யுத்தம் நெடுங்காலம் நடக்கும் என்று எதிர் பார்க்கிறோம். அதனுடைய நிகழ்ச்சிகளையும், கஷ்டங்களையும் அளவிட்டுக்கூறமுடியாது ஆனால் ஒன்று மாத்திரம் நிச்சயமாகக் கூறலாம். புதிய ஐரோப்பாவை ஏற்படுத்த ஜெர்மனியால் முடியாது; ஐரோப்பிய குடும்பத்தின் புதிய திட்டம் ஜெர்மானியர் கைகளால் வகுக்கப்படப்போவதில்லை. இந்த விஷயம் உலகமெல்லாம் பார்க்கும்படியாக, பிரம்மாண்டமானதும், மறுக்கமுடியாததுமான உண்மையாய் விளங்குகிறது.

"ஜெர்மன் பட்டாளங்களும், நாஜி போலீசும், புகுந்த ஒவ்வொரு நாட்டிலும், ஜெர்மனியின் மேலும், நாஜிக் கொள்கையின்மேலும் மிகுந்த வெறுப்பு ஏற்பட்டிருக்கிறது. அந்த வெறுப்பு மாறுவதற்கு நூற்றுக் கணக்கான வருஷங்கள் செல்லும். நாஜிக் கொள்கையிலிருந்து விடுதலை, எப்போது, எதனால், வரும் என்பது தெரியாது. ஆனால் ஹிட்லர் கால் வைத்த இடங்களும், தொத்து வியாதியுடைய புரையேறிய கை வைத்த இடங்களும், நன்றாகத் துடைக்கப்பட்டு சுத்தி செய்யப்படும்; அவசியமானால் அந்த அடையாளங்களை வெடி மருந்தால் சுட்டுத் தகர்க்கப்படும்.

### ஒரு வருஷத்திற்கு முன்பு.

"ஒரு வருஷத்திற்கு முன்பு, பிரிட்டிஷ் அரசாங்கம் தனிப்பட்டு நின்று இந்தப் புயல் காற்றுடன் போராட நேர்ந்தபோது, பிரிட்டனுடைய முடிவு காலமும், அதன் ஸ்தாபனங்களின் முடிவுகாலமும் இடிவிட்டது என்று அதனுடைய நண்பர்களும், விரோதிகளும் நினைக்கும்படியாய் இருந்தது. எங்களுடைய பட்டாளங்கள் சிதறியிருந்தன; எங்களுக்கு ஆயுத பலமில்லை, ஒரு பீரங்கியாவது 'டாங்கியாவது' பிரிட்டனில் இல்லை யென்று சொல்லலாம்; எங்களுடைய சாமான்களும், வெடிகுண்டு வகையறுக்களும் பிரான்சில் இழக்கப்பட்டன. ஆனால் அந்த நெருக்கடியான நேரத்தில்கூட பிரிட்டிஷ் மக்கள் ஜெபக்கோலம் பூண்ட எதிரியுடன் சமாதானம் செய்துகொள்ளவேண்டும் என்று கனவில்கூட நினைக்கவில்லை என்று சிறிது இறுமாப்புடன் கூற விரும்புகிறேன். பொதுக்கொள்கைக்காகச் செய்து வந்த போராட்டத்தைப்பற்றி அவர்கள் மனம் தளரவேயில்லை.

"சென்ற வருஷம் இருந்த அந்த ஜூன் மாதக் கஷ்டமான நாள்களிலிருந்து, இப்போது எவ்வளவு தூரம் முன்னே போயிருக்கிறோம் என்பதைப்பற்றி சிந்திக்கும்படி உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன். நமமுடைய பிடிவாதமான பலம் நிலைத்து நின்றது. தனிப்பட்ட ஆகாய பலம் இப்போது நமக்கு இருக்கிறது. எதிரியின்மேல் பழிக்குப்பழி வாங்கிக்கொண்டு தான் வருகிறோம். பிரிட்டிஷ் கடற்படை கடல்களை ஆளுகிறது. இத்தாலிய கடற்படை பயத்தால் உடைந்து ஒடுங்கி, துறைமுகங்களில் ஒளிந்துகிடக்கிறது. ஜெர்மனியின் கடற்படை பெரும்பாலும் முறியடிக்கப்பட்டு, முழுகடிக்கப்பட்டுக் கிடக்கிறது. எங்களுடைய துறைமுகங்களையும், பட்டணங்களையும், தொழிற்சாலைகளையும் தாக்கினதினால், பிரிட்டிஷ் மக்களின் வீர உணர்ச்சி ஒரு சிறிதும் குறையவில்லை; எங்களுடைய தேசிய வாழ்க்கை பாதிக்கப்படவில்லை; எங்களுடைய மகத்தான யுத்த முயற்சியின் முன்னேற்றம் தடைப்படவில்லை.

"கடல்களுக்கப்பாலிருந்து எங்களுக்கு உணவும், யுத்த சாமான்களும் வந்துகொண்டேயிருக்கின்றன. முழுகடிக்கப்பட்ட கப்பல்களுக்குப் பதிலாக இங்கும் அமெரிக்காவிலும் புதிய கப்பல்கள் செய்யப்படுகின்றன. நாங்கள் போர்க்கோலங் கொண்ட மக்களாய் இருக்கிறோம். எங்களுடைய தரைப் படைகள் ஆயுத முஸ்தப்பிலும், பயிற்சியிலும் பூரண அனுபவம் பெற்றுக்கொண்டு வருகின்றன.

"ஹிட்லர், சித்திரவதையால் கஷ்டப்படும் ஐரோப்பாவில் தன்னுடைய இஷ்டம்போல் மிதித்துக் கொண்டு போகலாம். ஆப்பிரிக்காவிலும், ஆசியாவிலும் முரட்டுத்தனமாய்ப் பிரவேசிக்கலாம். ஆனால், பிரிட்டனில்தான், இந்தத் தீவாகிய கோட்டையில்தான், ஹிட்லர் முடிவுகாணும் யுத்தத்தை நடத்தியாகவேண்டும். கடலிலும், நிலத்திலும், ஆகாயத்திலும் நாங்கள் விடாமல் எதிர்த்துக்கொண்டிருப்போம். ஹிட்லர் எங்கு போனாலும் அங்கு நாம் துரத்திக்கொண்டு செல்லுவோம். ஹிட்லரால் ஜெயிக்கப்பட்ட நாடுகளில் புரட்சிக்கு உதவி செய்வோம். ஹிட்லருடைய ஒவ்வொரு முயற்சியையும் உடைத்துப் பாழ்படுத்துவோம். பிரிட்டனைத் தாக்கினால், அதற்குக் கொஞ்சமும் அஞ்சமாட்டோம். கடவுளுடைய ஆதரவைக் கொண்டு, எங்களுடைய வேலை முடியும் வரை நாங்கள் இடைவிடாது எங்களுடைய கடமையைச் செய்து கொண்டுதான் வருவோம்.

### சுதந்தரத்தை மதிக்கும் மக்களுக்கு.

முடிவாக உலக மகா ஜனங்களுக்கு நாங்கள் ஒரு செய்தி யனுப்ப விரும்புகிறோம். எல்லா நாட்டினர்களுக்கும், சுதந்தரமுள்ளவர்களுக்கும், சுதந்தரமிழந்தவர்களுக்கும், சுதந்தரத்தை மதிக்கும் எல்லா நாட்டு மக்களுக்கும், எங்களுடைய நேச தேசத்தார்களுக்கும், எங்களுடைய வெற்றியைக் கோருபவர்களுக்கும், அமெரிக்காவில் எங்களுக்குப் பேருதவி செய்யும் நண்பர்களுக்கும், நாங்கள் அனுப்பும் செய்தியாவது :—

"உங்களுடைய இருதயத்தை உற்சாகப்படுத்துங்கள். எல்லாம் முடிவில் நாம் கோரியபடி நடக்கும். துக்கம், தியாகம் இவைகளின் ஆழத்திலிருந்து மனித வர்க்கத்தின் சிறப்பு மீண்டும் உயிர்பெற்று எழும்."

### நேச தேசப் பிரதிநிதிகளின் பேச்சு.

மிஸ்டர் சர்ச்சில் பேசி முடிந்த பிறகு, நேச தேச அரசாங்கங்களின் பிரதிநிதிகள் அவரை மிகவும் ஆதரித்தும் ஜர்மனியை வன்மையாகக் கண்டித்தும் பேசினார்கள்.

### நேச தேசத்தார் தீர்மானம்.

நேச தேச மகாநாட்டில் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது :—

"பிரிட்டன், அயர்லாந்து, கனடா, பெல்ஜியம், செகோஸ்லாவாகியா கிரீஸ், லக்செம்பர்க், நெதர்லாந்து, நார்வே, போலந்து, யூகோஸ்லாவியா, இவைகளின் அரசாங்கங்களும், சுதந்தர பிரெஞ்சுக்காரர்களின் தலைவர், ஜெனரல் டிகாலின் பிரதிநிதிகளும், கொடுங்கோன்மைக்கு எதிராக நடத்தும் யுத்த சம்பந்தமாக கீழ்க்கண்டவாறு முடிவு செய்கிறார்கள் :—

(1) ஜெர்மன், இத்தாலிய ஆக்கிரமிப்பை எதிர்த்து வெற்றிகாணும்வரை விடாமல் போராடுவோம்; அதற்காக எங்களாலியன்ற பரஸ்பர உதவியும் ஒத்துழைப்பும் செய்வோம்;

(2) ஜெர்மனியும் அதன் சகாக்களும் பலாத்காரத்தால் சுதந்தர நாடுகளின் மக்களை அடக்கியாளும் வரையில், அல்லது நிர்ப்பந்த வாழ்க்கையில் வசிக்கும் வரையில், எந்த விதமான ஒப்பந்தமும் சமாதானமும், நல்வாழ்வும் இருக்க முடியாது;

(3) நிலையான சமாதானம் இருக்கவேண்டுமானால், ஆக்ரமிப்பு பயமில்லாத உலகில சுதந்தர மக்களின் மனப்பூர்வமான ஒத்துழைப்பின்மேல்தான் அதை ஏற்படுத்தவேண்டும்; அப்போதுதான் எல்லோரும் பொருளாதாரப் பாதுகாப்பும், சமூக அமைதியும் அனுபவிக்க முடியும்; நாங்களும் இதர சுதந்தர மக்களும், யுத்த காலத்திலும், சமாதான காலத்திலும், இந்த லட்சியத்தை அடைவதற்காக ஒத்துழைப்போம்.

## லிபியாவில் பிரிட்டிஷ் துருப்புகளின் முன்னேற்றம்.

சென்ற வாரம் சோலும் பிரதேசத்தில் பிரிட்டிஷ் துருப்புகள் முன்னேறிச்சென்று தாக்கின. ஹால்பியா கணவாய்க்கு மேற்கே போர் நடந்தது. பிரிட்டிஷ் துருப்புகளும், இந்தியத் துருப்புகளும் கபூசோ வரைக்கும் முன்னேறிச் சென்றிருக்கின்றன. இந்த இடத்தில்தான் ஜெர்மானியர்கள் அநேக தடவை தாக்கியும் பயனில்லாமல் போய்விட்டது. ஜெர்மானியர்களும், இத்தாலியர்களும், சோலும் என்ற இடத்தில் இன்னும் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு வெளியில் இருந்து உதவியும் உணவும் வருவதற்கு வசதி இல்லை. 'டாங்கி'களும், யுத்த மோட்டார் படைகளும், ஆகாய விமானங்களும், இரண்டு தரப்பிலும் அதிகமாக இருக்கின்றன. சண்டை மும்முரமாக நடக்கிறது. கூடிய சீக்கிரம் ஜெனரல் வேவல், லிபியாவில் ஒரு பெரும் வெற்றியை அடைவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சிரியா : நேசதேசத்தார் முன்னேற்றம்.

சிரியாவில் நேசதேசப்படைகள் முன்னேறிச் சென்றுகொண்டிருக்கின்றன. விஷி துருப்புகளைச் சரணமடையும்படி செய்தால், வீணாக பிரெஞ்சுத் துருப்புகள் நாசமாகாமலிருக்கும் என்ற எண்ணத்தினாலும், பிரெஞ்சு மக்களுடைய மனம் அனாவசியமாக நோகும்படி செய்யக்கூடாது என்ற காரணத்தினாலும், நேசதேசத்தினர் ஜாக்கிரதையாக முன்னேறிச் செல்கிறார்கள். ஆனால் இம்மாதிரியான எண்ணங்களை விட்டுவிட்டு, சீக்கிரம் சிரியா முழுவதையும் கைப்பற்றவேண்டும் என்று "நியூஸ் கிரானிகிள்" பத்திரிகை கூறுகிறது. சிரியாவின் தலை நகருக்கருகில் நேசதேசத்துருப்புகள் வந்துவிட்டன. சீடான் பிடிக்கப்பட்டது. பிரிட்டிஷ் கடற்படையும், விமானப் படையும், தரைப்படைகளுக்குத் தகுந்த உதவி செய்து வருகின்றன. சுதந்தர பிரெஞ்சுத் துருப்புகள் இந்தப் போரில் பெரும் புகழும் பெற்றிருக்கின்றன.

## சிங்கப்பூர் : கிழக்குப் பிரதேசத்தின் திறவுகோல்.

### பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஒரு முக்கிய அரண்.

சிங்கப்பூர் என்பது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கிழக்கு அரண். ஆசியாவின் தென்கோடியில், கிழக்கு பிரதேசத்தின் திறவுகோலாக இது விளங்குகிறது. இது ஒரு தீவு, ஒரு நகரம், ஒரு கடற்படைத்தளம். ஐக்கிய மலையா நாடுகளிலிருந்து ஒரு கால்வாயால் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒரு இடத்தில் அந்தக்கால்வாய் 1¼ மைல் அகலமாயிருக்கிறது. மலேரியா நிறைந்த காட்டை உலகத்திலேயே மிகப்பெரியதும், நவீனமானதுமான கடற்படைத் தளமாகப் பிரிட்டன் செய்திருக்கின்றது. இப்படிச் செய்வதற்கு 17 வருஷங்கள் ஆயிற்று. இதனுடைய விஸ்தீரணம் 18 மைல் நீளம், 15 மைல் அகலம். இதன் ஜனத்தொகை 7 லட்சம். இதில் மூன்றில் இரண்டு பாகம் சீனாக்காரர்கள்; மலேயாக்காரர்கள் 95,000; ராணுவ சம்பந்தமில்லாத வெள்ளைக்காரர்கள் 8 000. உலக வியாபாரத்துக்கு சிங்கப்பூர் ஒரு முக்கிய ஸ்தானம். அதன் துறைமுகத்தின் மூலமாகத்தான் உலக 'சப்ளை' யின் பெரும் பகுதியான ரப்பரும், தகரமும் கொண்டுபோகப்படுகின்றன.

19 8 ல் கட்டி முடிக்கப்பட்ட கடல்தளம் சிங்கப்பூர் தீவின் வடக்குக்கரையிலிருக்கின்றது; 50 சதுர மைல் விஸ்தீரணமுள்ள பாதுகாப்பு ஏற்பாடமைந்த நங்கூர வசதியுள்ளது. ஒரே சமயத்தில், பிரிட்டன், அமெரிக்கா, இவைகளின் கப்பல்களெல்லாம் இந்த துறைமுகத்தில் தங்கலாம். பூமிக்குமேலும், அடியிலும், கப்பல்கள் பழுதுபார்க்கும் சாமான் கடைகளும், பாரம் தூக்கும் யந்திரங்களும், கப்பல் நிற்கும் சாலைகளும், ரயில்வேக்களும் இருக்கின்றன. ஒரு பெரிய தொழிற்சாலைப் பட்டணத்தைப்போல் சிங்கப்பூர் விளங்குகிறது. தரைக்குமேலும், அடியிலும் ஏராளமான பெட்ரோல் 'டாங்கி'களும் வெடிகுண்டு சாலைகளும் இருக்கின்றன. கடற்படைக்கும், ஆகாய விமானப்படைக்கும் வேண்டிய அளவுக்கு இந்த சௌகரியங்கள் இருக்கின்றன.

தீவின் வடகோடி முனையையும், ஆசியாவின் நிலப் பகுதியையும் ஒரு பெரிய பாலம் ஒன்று சேர்க்கிறது. இந்தப் பாலத்தில் வெடிகுண்டுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. எதிரி ஒரு சமயம் இந்தப் பாலத்தின் அருகில் வருவதாயிருந்தால், ஒரு பொத்தானை அழுத்தினால் உடனே பாலம் சுக்கல் சுக்கலாய் நாசமாக்கப்படும். கடற்படைத் தளத்தைச்சுற்றி உள்ள கடலில் நீர்குண்டுகள் வைக்கப்பட்டுள்ளன. அநேக விமான எதிர்ப்புப் பீரங்கிகள் சுற்றிலும் வைக்கப்பட்டிருக்கின்றன. அதி தூரத்தில் சுடும் பீரங்கிகள், பல இடங்களில் வைக்கப்பட்டிருக்கும் ஆகாய விமானங்கள் முதலியவைகள் கப்பல் தளத்தைப்பாதுகாக்கின்றன. இதைக் கட்டுவதற்கு 2 கோடி பவுன் செலவாயிருக்கிறது. மால்டா, ஜிப்ரால்டர், பெர்ல் துறைமுகம், பனாமா கால்வாய் பிரதேசம்—இவைகளுக்கு ஏற்படுத்தப்பட்ட சிறந்த பாதுகாப்புகளைப்போல் சிங்கப்பூர் கப்பல் தளத்துக்குப் பாதுகாப்புகள் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. சிங்கப்பூர் இல்லாவிட்டால், ஜப்பான் டச்சு கிழக்கிந்திய தீவுகளைக் கைப்பற்றிவிடும். ஆஸ்திரேலியாவுக்குப்போகும் வழி தடையில்லாத திறந்த வழியாய்விடும். அமெரிக்காவின் ஆதிக்கத்திலிருக்கும் பிலிப்பைன் தீவுகளும் ஜப்பானால் கைப்பற்றப்படும்.

### ஜப்பானுடைய நோக்கம்.

ஜப்பான் தெற்குநோக்கிச் செல்வதெல்லாம், சிங்கப்பூரின்மேல் வைத்திருக்கும் கண்ணோட்டம் தான். ஆனால் பிரிட்டன் இந்த கடற்படைத் தளத்தைப் பாதுகாக்க சகல ஏற்பாடுகளையும் செய்திருக்கிறது. விமானப்படைத் தலைவர் சர். ராபர்ட் புரூக்-பாப்பம் தூரக் கிழக்கரங்கத்துக்குப் பிரதம தளகர்த்தராய் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் சிங்கப்பூரைத் தலைமை ஸ்தானமாக வைத்திருக்கிறார். மலேயா, பர்மா, ஹாங்-காங் இவைகளிலுள்ள பிரிட்டிஷ் தரைப்படைகளும், ஆகாய விமானப்படைகளும் அவருடைய தலைமையின் கீழிருக்கின்றன. சீனாவில் உள்ள பிரிட்டிஷ் கப்பற்படைத் தலைவர், சர். ஜியாப்ரி லெய்டன் இவரோடு கலந்து ஒன்று சேர்ந்து வேலை செய்கிறார். தரைப்படைக்கும், விமானப்படைக்கும் வேண்டிய ஆயுதம், யுத்த சாமான்கள் முதலியன ஏராளமாக வந்துகொண்டேயிருக்கின்றன.

சிங்கப்பூரைப் பாதுகாக்கும் துருப்புகள் நாளுக்கு நாள் பலத்திலும், எண்ணிக்கையிலும் அதிகரிக்கின்றன. இந்தியாவிலிருந்து எல்லா யுத்த முஸ்தீப்புமுடைய துருப்புகள் அங்கு சென்றிருக்கின்றன. வேண்டிய மோட்டார் வண்டிகளை, துருப்புகள் தாங்கள் போகும்போது உடன்கொண்டு சென்றன. சமீபத்தில், ஆஸ்திரேலியாவிலிருந்தும், நியூஜிலாந்திலிருந்தும் ஆகாய விமானப்படைகள் சிங்கப்பூருக்கு வந்து சேர்ந்தன. இதனால் அந்த நாடுகள் தூரக்கிழக்கரங்கத்து அரணைப் பாதுகாப்பதின் அவசியத்தை உணர்ந்திருக்கின்றன என்று தெரிகிறது. சிங்கப்பூரில் ஒரு 'ரேடியோ' நிலையமும் இருக்கிறது. அது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கிழக்கு பாகத்தை ஒன்று சேர்ப்பதில் ஒரு முக்கியமான அம்சமாயிருக்கின்றது.

**குறிப்பு.—யுத்த சஞ்சிகையின் பிரதிகளைத் தயவுசெய்து ஒன்றின்பின் ஒன்றாக விடாமல் சேர்த்துவரவும்.**

[சென்னை இன்பர்மேஷன் டைரெக்டர் அவர்களால் அன்புடன் அளிக்கப்பட்டது.]

MADRAS : PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.